மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அவர்களை அனுப்புவதற்கு சில விதி முறைகளை வைத்திருக்கிறோம். அதன்படி அனுப்பப்படுகிற வர்களில் யாரையாவது சிறந்தவர்களாகக் கருதுவார்களானால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உரிமையைப் பெறுகிறார்கள். அவ்வாறுதான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு அரசாங்கம் கிராண்ட் கொடுக்கிறது. அதிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் மேனேஜ் மெண்டார்கள் கிராண்டை வாங்கிக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல், அதற்காக கோர்ட்டுகளுக்குச் சென்று வழக்காடி சம்பளத்தை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் கொடுக்கக்கூடிய கிராண்டை ஆசிரியர்களுக்குச் சம்பளமாக நேரடியாக கொடுத்துவிட்டு, அதில் மீதம் ஏதாவது இருந்தால் மேனேஜ்மெண்டுகளுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டுமென்பதிலே அரசுக்கு நல்ல அக்கறை இருந்து கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு பல நடவடிக் கைளைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Salary Savings Scheme for Union Employees in Mayuram.

* 27 *Q*.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Salary Savings Scheme of the L.I.C. for the teachers, etc., in Mayuram block is not in vogue since April 1976 in spite of the Collector's instructions;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken thereon by the Government to revive the scheme ?

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை. ஆயுள் காப்பீட்டுக் கழக ஊதிய சேமிப்புத் திட்டம் மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1971 லிருந்து செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) & (இ) இந்த வினாக்களுக்கு இடமில்லை.

திரு. க. சுப்பு: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக குறிப்பிட்ட அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய ஒருவருடைய தலையீட்டின் காரணமாக ஆசிரியர்களுக்கு அந்தப் பலன்கள் கிடைக்கவில்லை என்ற புகார் எழுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரின் அடிப் படையிலே தான் இந்த வினா போடப்பட்டு இருக்கிறது, ஆனால் நீங்கள் அவர்கள் பலன்களை அனுபவித்து வருகிறார்கள் என்று பதில் சொல்கிறீர்கள். அது உண்மைக்கு மாறாக இருக்கிறதே? அதைப்பற்றி என்ன தகவல் கொடுத்து இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அந்தப் புகார் தவறானது. மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1971 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் உட்பட 78 நபர்கள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வாண்டு பிப்ரவரி திங்களில் மேலும் 19 நபர்கள் இத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அந்த மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கட்டளையிட்டதற்குப் பிறகும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1978 ஆம் ஆண்டிலிருந்து என்று குறிப்பிட்டார்கள். ஆனால் திரு. சுப்பு அவர்கள் கேட்டபோது 1976 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்து அதை நடைமுறைப் படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அது தொடர்ந்து நடை முறைப்படுத்தப்படுகிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அதனைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.